විශ්‍රාම වැටුප් දෙපාර්තමේන්තුව
ஓய்வூதியத் திணைக்களம்
DEPARTMENT OF PENSIONS
ශ්‍රී ලංකා විශ්‍රාම
இலங்கை ஓய்வு
Sri Lanka Pensions

පරපුරක අභිමානය    தலைமுறையொன்றின் பெருமிதம்    Pride of a Generation

මගේ අංකය / எனது இல. / My No. } Pen/Pol/06/26-2024
ඔබේ අංකය / உமது இல. / Your No. } ..............................
දිනය / திகதி / Date } 2025.06.26

**ஓய்வூதிய ஆலோசனைக் கடிதங்கள் : 10/2024 (திருத்தம் I)**

அனைத்து மாவட்ட செயலாளர்களுக்கும்
அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும்

**ஓய்வூதியம் பெறுநர்களின் உயிர்வாழ் சான்றிதழ் - 2025**

ஓய்வூதியத்திற்காக அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படுகின்ற செலவினம் அரசாங்க வருமானத்தில் 10% ஆகும். எனவே, ஓய்வூதியம் வழங்கும்போது அது வழங்கப்பட வேண்டிய சரியான ஓய்வூப்பெறுநருக்கே வழங்கப்படுகின்றது என்பதை உறுதி செய்வதும், ஓய்வூதியம் வேறு எவருக்கும் வழங்கப்படாமல் இருப்பதை உறுதி செய்வதும், ஓய்வூதியம் வழங்குவதில் தவறுகள் மற்றும் மோசடிகளைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதும் ஓய்வூதியத் திணைக்களம், பிரதேச செயலகத்தின் ஓய்வூதியம் தொடர்பான விடயபொறுப்பு அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியம் பெறுநர்கள் ஆகியோரின் பொறுப்பாகும்.

02. அதன் படி ஓய்வூதியம் உரிய, ஓய்வூதியம் பெறுநரிடமே வழங்கப்படுகின்றது என்பதை உறுதி செய்வதற்கு ஓய்வூதியம் பெறுநர்களிடமிருந்து வருடாந்தம் உயிர்வாழ் சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்படுகின்றது.

03. 2024.12.19 ஆம் திகதிய ஓய்வூதிய அறிவுறுத்தல் கடிதங்கள் 10/2024 மூலம் 2025 ஆம் ஆண்டுக்காக ஓய்வூதியம் பெறுநர்கள் தங்கள் உயிர்வாழ் சான்றிதழ்களை எவ்வாறு புதுப்பிக்க வேண்டும் என்பது தொடர்பான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. அதன்படி, கைரேகைகள் மூலமாகவும் / கிராம அலுவலர்களால் தயாரிக்கப்பட்ட படிவத்தின்படியும் உயிர்வாழ் சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டு, அதனுடன் தொடர்புடைய தரவு அமைப்பைப் புதுப்பிக்கவும் 2025.03.31 வரை அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு அனுமதி வழங்கப்பட்ட காலப் பகுதிக்குள் உயிர்வாழ் சான்றிதழ்களைப் புதுப்பிக்காத ஓய்வூதியம் பெறுநர்களின் ஓய்வூதியம் மேற்கண்ட அறிவுறுத்தல் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின்படி நிறுத்தி வைக்கப்படுதல் வேண்டும். இருப்பினும், சிங்களப் புத்தாண்டு, வெசாக் பண்டிகை மற்றும் பொசன் பண்டிகை போன்ற மத விழாக்கள் இருந்தமையாலும், பாதகமான

வானிலை தாக்கத்தையும் கருத்தில் கொண்டு, 2025.03.31 ஆம் திகதியில் உயிர்வாழ் சான்றிதழ்களைப் புதுப்பிக்காத ஓய்வூதியம் பெறுநர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவது நிறுத்தப்படவில்லை.

04. இருப்பினும், தற்போது இறப்பு, காணாமல் போதல் அல்லது பிற காரணங்களால் உயிர்வாழ் சான்றிதழ்கள் புதுப்பிக்கப்படாத ஓய்வூதியதாரர்களின் எண்ணிக்கை 8,433 என்று பதிவாகியுள்ளது. நாட்டில் பொருளாதார நெருக்கடி காணப்பட்ட போதிலும், சிரமங்களுக்கு மத்தியில் ஓய்வூதியம் வழங்குவதற்காக நிதி வழங்கப்படும் இத்தகைய சூழ்நிலையில், அரசு நிதயை வேறு ஒருவர் தவறாகப் பயன்படுத்துவதால் பொது நிதி முகாமைத்துவத்திற்கு ஏற்படும் விளைவினை தடுப்பதற்காக 2025.06.30 ஆம் திகதி தொடக்கம் உயிர்வாழ் சான்றிதழ்கள் புதுப்பிக்கப்படாத ஓய்வூதியம் பெறுநர்களிடம், ஓய்வூதியம் வழங்குவதை 2025 யூலை மாதம் தொடக்கம் நிறுத்தி வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

05. எனவே, இதுவரை உயிர்வாழ் சான்றிதழ் வழங்காதிருக்கும் ஓய்வூதியப்பெறுநர்கள் 2025.06.30 ஆம் திகதிக்கு முன்னர் உயிர்வாழ் சான்றிதழ்களை வழங்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டு, அவர்களால் சமர்ப்பிக்கப்படும் உயிர்வர்ழ் சான்றிதழ்கள் தொடர்பான தகவல்கள்களைக்கொண்டு சரியாக தரவு அமைப்பை புதுப்பிக்கப்படுவதற்காக ஓய்வூதிய விடயபொறுப்பு அலுவலர்கள் மற்றும் கிராம அலுவலர்கள் வழிநடாத்துவார்கள் என்று எதிர்பார்க்கின்றேன்.

ஒப்பம்:

**சாமிந்த ஹெட்டிஆரச்சி**

ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்


தொலைபேசி : 011 2 421786

தொலை நகல் : 011 2 431413

மின்அஞ்சல் முகவரி : pen7policydep@gmail.com


பிரதிகள் :-

1) செயலாளர், அரசாங்க நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு - த.த.பொ.
2) பணிப்பாளர் (ஓய்வூதியம்), ஓய்வூதிய திணைக்களம்
3) உதவிப் பணிப்பாளர் (வெளிநாட்டு ஓய்வூதியம் ), ஓய்வூதிய திணைக்களம்

(2, 3) – தயவுசெய்து 2025 ஆம் ஆண்டுக்கான உயிர்வாழ் சான்றிதழ் புதுப்பிக்கப்படாத வெளிநாட்டில் உள்ள ஓய்வுப்பெறுநர்களுக்கு ஏற்புயைடதாக மேற்படி ஏற்பாடுகளின் படி மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுப்பதற்கு